கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

**முன்னிலை - திருமதி. பா.கலைநிலா, M.L.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை

2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01-ம் நாள், வியாழக்கிழமை

**I.A. No.4/2022 in O.S. No.125/2006**

1. வேல்ச்சாமி (இறந்துவிட்டார்)
2. கு.ஜெயராஜ்
3. சுப்புத்தாய்
4. வீரமணி ... மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

மா.சுப்பிரமணியன் ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனு 23.11.2022-ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.பாரதமணி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும் உள்ள நிலையில், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களைக் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள ஆவணங்களை மற்றும் இம்மனுவில் கண்டுள்ள சாட்சியினை சம்மன் செய்து உத்தரவிட வேண்டி, கட்டளை 16 விதி 2 மற்றும் பிரிவு 151 சி.பி.சி. மற்றும் சி.ஆர்.பி. விதி 76-ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்

தாவா சொத்துக்கள் சம்பந்தமாக, இரு தரப்பிலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. அசல் வழக்கு எண்.125/2006, தாவா சொத்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என அரசு ஆவணங்களில் தாவா சொத்து சம்பந்தமாக அடி அளவுகளை மனுதாரர்கள் / வாதிகள் நிரூபிக்க வேண்டியது அவசியமாக இருப்பதால், மேற்படி ஆவணங்களில் உள்ள விசயங்களை அரசு தரப்பிலிருந்து சாட்சியம் அளிக்க

வேண்டி உள்ளதாலும், இம்மனுவில் கண்டுள்ள ஆவணங்களில் வருவாய்துறையினரிடம் நகல் பெறுவதற்கு காலதாமதம் ஆகும் என்பதால், நீதிமன்றம் மூலம் சம்மன் செய்து தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி ஆவணம் மிக அவசியமானவை. எனவே, இம்மனுவில் கண்டுள்ள ஆவணங்களை மற்றும் இம்மனுவில் கண்டுள்ள சாட்சியினை சம்மன் செய்து உத்தரவிட வேண்டி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1-ம் எதிர்மனுதாரர் / 1-ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>

i) மனுவில் கண்ட 3-ம் மனுதாரர் / 3-ம் வாதி சுப்புத்தாயின் கணவர் பெயர் வேலுச்சாமி ஆகும். அதேபோல் 4-ம் மனுதாரர் / 4-ம் வாதி வீரமணியின் தகப்பனார் பெயரும் வேலுச்சாமி ஆகும். ஆனால், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் குருசாமி மனைவி சுப்புத்தாய் என்றும், குருசாமி மகன் வீரமணி என்றும், உள்நோக்கத்தோடு குறிப்பிட்டுள்ளார்கள். அரசு ஆவணங்களில், அடி அளவுகளை மனுதாரர்கள் நிரூபிக்க வேண்டி இருப்பதாகவும், அரசுத் தரப்பிலிருந்து சாட்சியம் அளிக்க வேண்டி இருப்பதாகவும், மனுவில் கண்டுள்ள ஆவணங்களை வருவாய் துறையினரிடம் நகல் பெறுவதற்கு காலதாமதம் ஆகும் என்பதால், சம்மன் செய்து தாக்கல் செய்ய வேண்டியுள்ளதாக கூறியிருக்கும் விசயங்களை மனுதாரர்கள் / வாதிகளே நிரூபிக்க வேண்டும்.

ii) வாதிகள் தரப்பில், அசல் வழக்கு எண்.125/2006 வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அதுபோல, எதிர்மனுதாரர் / பிரதிவாதியும், வாதியாக இருந்து நீதிமன்றத்தில் விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி, அசல் வழக்கு எண்.47/2015 வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி இரண்டு வழக்குகளும் Joint Trial-ஆக விசாரணை நடைபெற்று வருகிறது. எதிர்மனுதாரர் தரப்பு அசல் வழக்கு 47/2015 வழக்கில், தாவா சொத்தானது, அருப்புக்கோட்டை நகராட்சி, வார்டு 2, பிளாக் டி, டவுண் சர்வே எண்.106/2 மற்றும் 115/2-ல் அமைந்துள்ளது சம்பந்தமான டவுண் சர்வே ரிஜிஸ்டர், புலவரைபடம், பட்டா ஆகிய ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட ஜெராக்ஸ் நகலுடன், டவுண் சர்வேயர் அவர்கள் வந்து ஆவணங்களை தாக்கல் செய்து, சாட்சியம் அளிக்க சம்மன் அனுப்ப உத்தரவிட வேண்டியது அவசியமாய் உள்ளது. எனவே, மேற்படி ஆவணங்களையும் தாக்கல் செய்தால்தான் தாவா சொத்துக்கள் சம்பந்தமான வருவாய்த்துறை ஆவணங்களின் உண்மை நிலையை நீதிமன்றத்தில்


P KALAI NILA Digitally signed by P KALAI NILA Date: 2022.12.01 18:31:17 +0530

நிரூபணம் செய்ய இயலும். எனவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள ஆவணங்களோடு, மேற்படி பிரதிவாதி கூறியுள்ள ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களையும் கொண்டுவந்து, சாட்சியம் அளிக்குமாறு டவுண் சர்வேயர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

iii) மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை பெறுவதற்கு, சட்டப்படியான நடவடிக்கைகள் எதையும் மனுதாரர்கள் மேற்கொள்ளவில்லை, முறையாக விண்ணப்பித்திருந்து அது வழங்கப்படவில்லை என்று எதுவும் மனுவில் தெரிவிக்கப்படவில்லை. எனவே, மனுதாரர்களின் மனு தள்ளுபடிக்குரியது. இவ்வழக்கின் விசாரணையை வீணாக காலம் கடத்தும் நோக்கில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்கள் / வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவை, எதிர்மனுதாரர் / வாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்றும், மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் வாய்மொழி சாட்சியமோ, ஆவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை.

5. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாகும்.

## <u>தீர்வு</u>

6. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், தாவா சொத்தின் அடி அளவுகளை மனுதாரர் நிரூபிக்க வேண்டுமென்ற நிலையில், மேலும், அசல் வழக்கு எண்.47/15 தாவா சொத்து பொறுத்து நிலுவையிலுள்ள நிலையில், தனது தரப்பினை நிரூபிக்க வேண்டி, நிலஅளவையர் அருப்புக்கோட்டை அவர்களை விசாரித்தால் மட்டுமே, சொத்தின் உண்மைநிலை தெரியவரும் என்பதால், அருப்புக்கோட்டை டவுண் சர்வே எண்.105/2 மற்றும் 115/2, வார்டு 2, பிளாக் டி-க்குரிய ஏ-ரெஜிஸ்டர் மற்றும் புல வரைபடம் ஆகியவற்றை ஆவணமாக எடுத்து வந்து நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுவினை அனுமதிக்க வேண்டி வாதிட்டார்.


P KALAI NILA Digitally signed by P KALAI NILA Date: 2022.12.01 18:31:34 +0530

7. எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், மனுதாரர் கோரியுள்ள ஆவணங்கள் பொது ஆவணங்கள் என்ற நிலையில், அவரே மேற்படி ஆவணங்களின் நகல் தாக்கல் செய்ய இயலும் என்றும், மேலும், இருதரப்பிலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அசல் வழக்கு எண்.47/15 மற்றும், இவ்வழக்கில் ஒரே விசாரணை உத்தரவிடப்பட்டு, இவ்வழக்கிலேயே சாட்சியங்கள் விசாரிக்கப்பட்ட நிலையில், அசல் வழக்கு எண்.47/15-ல் கண்ட, அருப்புக்கோட்டை நகராட்சி, வார்டு 2 பிளாக் டி, டவுண் சர்வே எண்.106/2 மற்றும் 115/2-க்குரிய டவுண் சர்வே ரெஜிஸ்டர் பட்டா மற்றும் புல வரைபடம் ஆகியவற்றை தாக்கல் செய்தால்தான் உண்மைநிலை தெரியவரும் என்பதால், எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் கண்ட சொத்துக்களுக்கும், ஆவணங்கள் எடுத்துவரும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்படலாம் என வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

8. இருதரப்பு வாதங்களும் நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர் மனுவில் அருப்புக்கோட்டை டவுண் சர்வே எண்.105/2 மற்றும் 115/2, வார்டு 2, பிளாக் டி-க்குரிய ஏ-ரெஜிஸ்டர் மற்றும் புல வரைபடம் கோரி, அருப்புக்கோட்டை நகராட்சி நிலஅளவையரை சாட்சியாக மேற்கண்ட ஆவணங்களுடன் விசாரிக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் தங்களது தரப்பு ஆவணத்தையும் எடுத்து வரும் பட்சத்தில் ஆட்சேபணை இல்லை என சொல்லப்பட்ட நிலையில், இவ்வழக்கில், Joint Trial உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால், வீண் காலதாமதம் ஏற்படாத வகையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் கோரியுள்ளபடி பரிகாரம் வழங்கப்படலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர் கோரியுள்ள அருப்புக்கோட்டை டவுண் சர்வே எண்.105/2 மற்றும் 115/2, வார்டு 2, பிளாக் டி-க்குரிய ஏ-ரெஜிஸ்டர் மற்றும் புல வரைபடம் மற்றும் எதிர்மனுதாரர் கோரியுள்ள ஆட்சேபணைகள் செய்யப்படாத நிலையில், மேற்படி தவறானது திருத்துவதற்குரியது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், மனுதாரர் கோரியுள்ள அருப்புக்கோட்டை நகராட்சி, வார்டு 2 பிளாக் டி, டவுண் சர்வே


P KALAI NILA Digitally signed by P KALAI NILA Date: 2022.12.01 18:31:43 +0530

எண்.106/2 மற்றும் 115/2-க்குரிய டவுண் சர்வே ரெஜிஸ்டர் பட்டா மற்றும் புல வரைபடம் நகல்களும் வழக்கினை நிரூபிக்க நீதிமன்றத்தில் சாட்சியால் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற இருதரப்பு வாதுரை ஏற்புடையது, என இந்நீதிமன்றம் கருதி, நீதியின் நலன் கருதி மேற்கண்ட ஆவணங்களின் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களுடன், நில அளவையர் அருப்புக்கோட்டை டவுண் அவர்கள் மேற்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டியும், சாட்சியம் அளிக்க வேண்டியும், தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் கருதி இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனுவானது, அசல் வழக்கு எண்.125/2006, அசல் வழக்கு எண்.47/2015 வழக்குகளில் கண்ட சொத்துக்கள் பொறுத்து வாதி, பிரதிவாதிகள் கோரியுள்ள ஆவணங்களை சாட்சி எடுத்து வரவேண்டும் என்ற நிபந்தனைகள் அனுமதிக்கப்பட்டு, உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்க்கப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P KALAI NILA
Digitally signed by P KALAI NILA
Date: 2022.12.01 18:31:50 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> - இல்லை.

P KALAI NILA
Digitally signed by P KALAI NILA
Date: 2022.12.01 18:31:58 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

-----------------------------------------------
Additional District Munsif Court,
Aruppukottai
I.A. No.4/2022 in O.S. No.125/2006
Fair Order / Draft Order
Dt :01.12.2022
-----------------------------------------------